00056

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**கல்விப்பீடம்**

**விசேட தேவைகள் சார் கல்வியில் சிறப்புக் கல்விமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024**

**மட்டம் - 05**

**SNU5244/ESU3244 – கலைத்திட்டக்கொள்கையும் நடைமுறையும்**

**காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்**

**திகதி:- 01.02.2025** **நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30**

**பகுதி I இல் சகல வினாக்களுக்கும் பகுதி II இலிருந்து ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை எழுதுக.**

## பகுதி I

1. "மறை கலைத்திட்டம்" (Hidden curriculum) என்பதன் அர்த்தம் என்ன என்பதைச் சுருக்கமாக விளக்குக.
2. கல்விக்கும் உளவியலுக்கும் இடையிலான தொடர்பைச் சுருக்கமாக ஆராய்க.
3. 1932 இல் 'ஹன்தஸ்ஸ கல்வி முறை' அறிமுகப்படுத்தப்பட்டதன் நோக்கங்கள் என்ன?
4. கெர் (Kerr) படி, கலைத்திட்ட மதிப்பீடு எவ்வாறு செய்யப்படுகிறது என்பதைச் சுருக்கமாக விவரிக்குக.
5. பாடசாலைக் கலைத்திட்டத்தின் ஒரு குறிக்கோளாக சமூகத்தேவைகளைப் பூர்த்தி செய்வதன் முக்கியத்துவத்தைப் பரீட்சிக்க.
6. பாடசாலைக் கலைத்திட்டத்தை நிர்வகிப்பதில் பாடசாலை அதிபரின் பங்கின் முக்கியத்துவத்தைச் சுருக்கமாக ஆராய்க.
7. கலைத்திட்ட மதிப்பீட்டாளர் கொண்டிருக்க வேண்டிய **ஐந்து** (05) குணங்களைக் குறிப்பிடுக.
8. பாட விடயங்களைத் தேர்ந்தெடுப்பதற்கான **ஐந்து** (05) நியமங்களைப் பட்டியலிடுக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

**9. i.** 'கலைத்திட்டம்' என்ற சொல்லுக்கு **இரண்டு** (02) ஏற்றுக்கொள்ளப்பட்ட வரையறைகளைத் தருக.

**(08 புள்ளிகள்)**

**ii.** அந்த வரையறைகளின் படி ஒரு கலைத்திட்ட வரையறைகளின் **நான்கு** (04) முக்கிய அம்சங்களை அடையாளம் காண்க.

**(06 புள்ளிகள்)**

**iii.** மேற்கண்ட அம்சங்களைக் கருத்தில் கொண்டு, உங்கள் சொந்த மொழிநடையில் அச்சொல்லை வரையறுக்க.

**(06 புள்ளிகள்)**

**10. i.** ஒரு கலைத்திட்டத்தின் நோக்கங்களைத் தீர்மானிப்பதற்கான ஆதாரங்களை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

**(10 புள்ளிகள்)**

**ii.** ஒரு கலைத்திட்டத்தின் இலக்குகள் மற்றும் நோக்கங்களைத் தீர்மானிப்பதற்கான செயல்முறையை விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**iii.** 1997இல் கல்வி சீர்திருத்தங்களின் **இரண்டு** (02) நோக்கங்களைக் குறிப்பிட்டு எடுத்துக்காட்டுக்களுடன் ஆராய்க.

**(04 புள்ளிகள்)**



105

**11. i.** டைலரின் (*Tyler*) கலைத்திட்ட அபிவிருத்தி மாதிரியை விரிவாக விவரிக்குக.

**(05 புள்ளிகள்)**

**ii.** டைலரின் கலைத்திட்ட அபிவிருத்தி மாதிரியின் பலவீனங்களை அடையாளம் காண்க.

**(05 புள்ளிகள்)**

**iii.** வீலரின் (*Wheeler*) மாதிரி இந்த பலவீனங்களை எவ்வாறு நிவர்த்தி செய்து சமாளிக்கிறது என்பதை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

**12. i.** இணைப் பாடவிதான செயற்பாடுகள் (Co – curricular activities) என்ன என்பதைச் சுருக்கமாக விளக்குக.

**(04 புள்ளிகள்)**

**ii.** விசேட கல்வித் தேவைகள் உள்ள குழந்தைகளின் அடிப்படைத் திறன்களை வளர்ப்பதற்கு இணைப்பாடவிதான செயற்பாடுகளின் முக்கியத்துவத்தை மதிப்பிடுக.

**(08 புள்ளிகள்)**

**iii.** விசேட கல்வித் தேவைகள் உள்ள குழந்தைகள் பாடசாலையில் இணைப்பாடவிதான நடவடிக்கைகளில் ஈடுபட எவ்வாறு ஊக்குவிப்பது என்பதை விளக்குக.

**(08 புள்ளிகள்)**

**13. i.** கலைத்திட்ட அபிவிருத்தியின் அவசியத்தை விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**ii.** இந்தியாவில் கல்வி வளங்கள் மற்றும் பயிற்சிக்கான தேசிய கவுன்சிலால் (National Council for Educational Resource and Training in India) வெளியிடப்பட்ட கலைத்திட்ட அபிவிருத்தியின் கொள்கைகளைப் பட்டியலிடுக.

**(06 புள்ளிகள்)**

**iii.** இலங்கைச் சூழலில் எடுத்துக்காட்டுக்களைக் கொடுத்து மேற்கண்ட கொள்கைகள் ஒவ்வொன்றும் எதைக் குறிக்கின்றன என்பதைச் சுருக்கமாக விளக்குக.

**(09 புள்ளிகள்)**

**14. i.** கலைத்திட்ட ஒழுங்கமைப்பின் நான்கு (04) அணுகுமுறைகளைக் குறிப்பிடவும்.

**(04 புள்ளிகள்)**

**ii.** அவற்றில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதன் தன்மை, முக்கிய அம்சங்கள், முக்கியத்தவம் மற்றும் பலவீனங்களைப் பற்றி ஆராய்க.

**(08 புள்ளிகள்)**

**iii.** இலங்கையில் ஆரம்பப்பாடசாலைக் கலைத்திட்டத்தை ஒழுங்கமைக்கப் பயன்படுத்தப்பட்ட ஒழுங்கமைப்பு முறைகளைப் பரீட்சிக்க.

**(08 புள்ளிகள்)**

*- முழுப்பதிப்புரிமை பெற்றது -*